சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: 1889 விரோதி ஹு ஆவணி மீ 26-ஆம் உ

உ
சிவமயம்

இலங்கையிற் செய்தித் தாளாகப்
பதிவு பெற்றது. பதிவு இல - 2.

# இந்து சாதனம்

பிரதி விலை
ரூபா 1-00

卐 Hindu Organ 卐

புத் - 99, 100 ] யாழ்ப்பாணம்:- விபவ ஹு பங்குனி மீ ( 20 - 03 - 1939 ) [ இல - 35

# தமிழ்மொழிநாள் = சுயநிர்ணயமாகப்

## பங்குனி மகம். "இந்துசாதன நூற்றாண்டு"

★ விபவ ஆண்டு
★ பங்குனித் திங்கள்
உத்தராயணம் -- சிசிர ருது:
பாற்குன - சைத்திர மீனமாதம்

### ஆங்கில ஆண்டு மூன்றும் மாதம் பங்குனி இருபதாம் நாள்

## சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள் நாள்

வெண்பா

சதாவதானப்புகழ் சான்றோன் சைவ
மதாவதானத்தெழில் மாணற் புதாவன்
விளங்குபுகன் நா. கதிரைவேற்பிள்ளை நாம்
வழக்கும் தமிழுலகில் வாழ்ந்து.

தெய்வத் தமிழ் மொழிச் சிலர் குறுமுனி அகத்தியர், ஒல்காப்புகழ் தொல்காப்பியனார், பெருந்தரவர் திருமூலர், பொய்யா மொழிப் புலவர் திருவள்ளுவர் என்ற பழங்கொடி படர்ந்து மக்கள் மால்கொள்ளா வண்ணம்



சதாவதானம் -

வந்தவதரித்த மாதவ நால்வர், சித்தாந்த சாத்திர வித்தகர்கள், மாக்கதை, கந்தன் கதை, மன்றுடி திருவிளையாடல் ஆதியாம் புராணம் பொழிந்த புலவர்கள் கிளைகளாக அவற்றின் சார்பிலே தளிராக வெழுந்த நாவலர் பெருமானும் அந்நாட் பேரறிஞர்களும் பரப்பிய நிழலில் வாழ்கின்ற தமிழ்பேசும் தகையினர் நாம் இந்தச் சிறந்த சால்பின் நினைவாக ஒவ்வோராண்டும் தமிழ் மொழி நாளாக ஒரு

( வளர்ச்சி 4 ஆம் பக்கம் )

### தமிழில் முடியும் !

#### தாராளமாக முடியும்

சில ஆண்டுகளுக்கு முன் சென்னையில் ஒரு நூல் "தமிழில் முடியுமா" என்ற கேள்விக்கு மறு மொழியாகப் பல அறிஞர்களின் ஆய்வுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது ஞாபகத்துக்கு இப்பொழுது வருகின்றது.

உடனே ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் ஆவேசப் பாடலும் நினைவாகின்றது.

புத்தம் புதிய கலைகள் -- பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள்
கூறும்

( வளர்ச்சி 2 ம் பக்கம் )

### சதாவதானி கலாவிநோதன் - மேலைப்புலோலி

## நா. கதிரைவேற்பிள்ளை

"செழுந்தமிழ் சிவணும் நிகழ்ச்சிகளில் எங்கணும் அறிவு மணம் செறியக் கமழ்வித்து நுகரவைக்கும் பேராற்றலும் பெருவிருப்புமுடையவர் யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள். நா. கதிரைவேற்பிள்ளை நினைவுக்குக் கருத்து அன்பார் வத்துடன் வழங்குகின்றனர். - ப—ர் )

ஈழ நாட்டிலிருந்து பல அறிஞர்கள் தமிழ் நாட்டிலே வாழ்ந்து, தமிழுக்குத் தொண்டாற்றிப் பெரும் புகழ் ஈட்டியுள்ளனர். தமிழ் நாட்டினர் ஈழ நாட்டாரின் புலமையினை நெடுங் காலமாக மதித்துப் பாராட்டி வந்துள்ளனர்.

நல்லை நகர் ஆறுமுக நாவலருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கப்பட்டது தமிழ் நாட்டிலேயாகும். சி. வை. தாமோதரம்பிள்ளைக்கு அங்குதான் 'ராவ் பகதூர்' என்ற அடை கிடைத்தது. மட்டக்களப்பு வித்தகர் முத்தமிழ் அறிஞர் சுவாமி விபுலானந்தருடைய 'யாழ் நூல்' அங்குதான் அரங்கேறியது. அத்துடன் அவருடைய அறிவினைப் பாராட்டி மதித்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியராகத் தமிழ் நாடு ஏற்றுக் கொண்டது.

"திறமான புலமையெனில் பிறநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கூற்றுக்கமைய ஈழ நாட்டார் கல்வித் தரம் தமிழ் நாட்டால் மதிக்கப்பட்டது. இத்தகைய சிறப்பு ஈழத் தமிழருக்கு ஏற்படுவதற்குக் காரணமாயிருந்தவர்களுள், பருத்தித்துறை மேலைப் புலோலியைச் சேர்ந்த

( பேராசிரியர் அ. சண்முகதாஸ் )

நா கதிரவேற்பிள்ளையும் ஒருவராவர். அவருடைய திறமைகள் பல வகைப்பட்டன; அன்னார் தமிழுக்கும் சைவத்துக்கும் ஆற்றிய தொண்டு சிறப்புடன் பேசப்படத்தக்கது.

தமிழ்நாட்டிலே 'சதாவதானி' என்றும், 'மாயாவாத துவம்ச கோளரி' என்றும் கதிரவேற்பிள்ளை சிறப்பித்துப் பேசப்பட்டார். அவருடைய நாவன்மையைப் பலரும் புகழ்ந்து பேசினர. கதிரவேற்பிள்ளை தமிழுலகுக்கு ஆற்றிய பணிகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

(1) திரு. வி. கலியாணசுந்தரனார் என்ற நற்பெருங்கொண்டலைத் தமிழுலகுக்கு உருவாக்கித் தந்தவர்களுள் கதிரவேற்பிள்ளையும்

(வளர்ச்சி 4- ஆம் பக்கம் )

### நூற்றாண்டினுள் ஓர் நூற்றாண்டு

பத்திரிகைப் பண்பாளர்
சென்னை நம. சிவசம்பு அவர்கள்.

சர்வதாரி ( 18 9 ) ஆண்டிலே சைவபரிபாலனசபையுடன் உலகில் உதித்தவர் மல்லைப்புலவர் இ. நமசிவாயம் பிள்ளை அவர்கள் சிரேட்ட புத்திரன் சிவசம்பு அவர்கள்;

சிவசம்பு அவர்களின் உதயத்தின் பின் ஆறுமாதங்கள் செல்ல விரோதி ஆவணி 28 ஆம் நாள் ( 11 - 09 - 1889 ) இந்துசாதன நங்கை தோன்றினள்.

இத்தகைய தொடர்பினூற் போலும் சிவசம்பு அவர்கள் 1915ம் ஆண்டு தொடக்கம் சிங்கை நாட்டிலிருந்து ஆங்கில இந்துசாதனத்துக்கு விசேட நிருபராக Lanka இலங்கா என்ற புனைபெயருடன் கிரமமாகச் சுவையான விடயதானம் செய்து வந்தனர்.

சிங்கை நாட்டிலிருந்து சென்னைக்குச் சென்ற சிவசம்பு அவர்கள் 1919 ) அப்பொழுது நீதிக்கட்சியென்று தொடங்கிய திராவிடக்கழகத் தினசரி -- நீதி -- JUSTICE - என்ற நிலையத்திலே அதிபராகக் கடமையாற்றி அதன் ஆசிரிய குழுவுக்கும் அரிய துணை புரிந்து வந்தனர்.

சில ஆண்டுகளின் பின் அப்பிரசுரத்தை விட்டு அரசியல் சம்பந்தமாகச் சிவசம்பு விலகினர், மிக முக்கிய காரணம் இவர் ஒரு காந்தித் தொண்டர் - கைத்தறியில் நூல் நூற்று அந் நூலைக் கொண்டே தமது ஆடைகளைத் தயாரிக்கும் புனித நியமம் பூண்டவர்.

தனித்துவ பத்திரிகா நிலையம் நிறுவி 'என்ன எங்கே எப்பொழுது' WHAT'S ON WHEN AND WHERE என்ற திங்கள் வெளியீட்டை நடத்தி வந்தனர் விளம்பர வித்தையை விருத்தி செய்ய அரிதின் முயன்றவர். ஆங்கில இந்து சாதனத்துக்கு மண்டை நீர்க்கட்டு நிவராணி (LITTLE'S

( வளர்ச்சி 2 ஆம் பக்கம் )

★ தேனினும் இனியது செந்தமிழ் அமுது ★

திருச்சிற்றம்பலம்.
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்
விபவ ஞூ பங்குனி மீ 7-
(20—03—1989)

## தூய ஒளி காட்டும் தாய் மொழி

— ★ —

முன்னறி தெய்வங்கள் தாயும் தந்தையும் இக் கூற்றினைச் சாற்றிய முன்னோர் அதை ஒரு மந்திரமாகவே அவ்வாறுரைத்தனர்.

மூலகாரணர் முதுமுதல் அந்த முழுமுதலை முதற்கண் தாய் தந்தையரிடத்தில் வைத்து விளக்கம் செய்தனர் மூதறிஞர்கள்.

தாயேயாகி வளர்த்தனை போற்றி என்று பரம தந்தையை நோக்கிப்பாடுகின்றனர் திருத்தொண்டர்

அரியது, பெரியது அறிவுக்குரியது இந்தத் தாய்மை என்னே! அது தூய்மையானது; அதுவே வாய்மையுமாம்.

இவ்வளவு செம்மையுடைய தாய் என்ற தூய சொல்லை மொழிக்கு அடைமொழியாக அமைத்தால் அம்மொழியின் செம்மைக்கும் நிகருண்டோ.

ஆதி பகவன் முத்றே உலகு; அகரத்தின் வழியே அனைத்தெழுத்துக்களும் எழும்என்றனா அருந்தவர் திருவள்ளுவர்.

அகரத்தை அடியாகக் கொண்ட மொழி தமிழ். யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் எங்கும் காணோம் என்றனர். பாஅறிந்த பாரதியார் அவ்வளவில் நின்று விடவில்லை உணர்ச்சிக் கவிஞர்; செந்தமிழ் நாடு என்று தாய் அகத்தை வந்தனை செய்கின்றனர். தந்தையர் வாழ்ந்ததும் அந்தச் செந் மிழ் நாட்டில் என மேலும் ஆநந்தம் கொள்கின்றனர்.
என்னே! தந்தையும் தாயும் நந்தமிழ்க் குரவர் என்ற சிந்தனை எழுந்ததனால் என்க.

தாய் மொழியான தமிழ் மொழிக்குத் தாய்மை எங்கிருந் துற்றெடுக்கின்றது!!
பொதியமலையில் வெள்ளியங்கிரியில் உதயமானது உள்ளொளிபரப்பும் தமிழ் மொழி

பெண்ணை ஒரு பாகம் வைத்தவர் பெருமான். எனவே தாயுமாய்த் தந்தையாய்த் ஆய கலைகள் யாவையும் தருகின்ற தமிழ்மொழிக்கு ஒரு தனித்துவம் தானாகவே அமைகின்றது.
என்ன புண்ணியம் செய்தனம் யாம் அன்னை தமிழ் மொழியாக.

## தமிழில் முடியும்



(1 ஆம் பக்கத்து வளர்ச்சி)

மெத்த வளருது மேற்கே -- அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை -- அவை
சொல்லும் திறமை தமிழினுக் கில்லை
என்றந்தப் பேதை உரைத்தான் — ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் -- கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்!

இந்த வசையினைப் போக்க ஈழம் எழுந்திட வேண்டும். பல்கலைக் கழகங்கள் அப் பண்பினைக் கையாளுதல் வேண்டும். சொல் அகராதி ஒவ்வொரு துறைக்கும் தொகுக்கப்பட வேண்டும். (தமிழ் - ஆங்கிலம்; சில இடங்களில் தமிழ் - இலத்தின் - பிறெஞ்சு . தமிழ்ச் சொற்களஞ்சியத்துக்கென ஒரு தனித் துறை தமிழ்ப் பீடத்தில் அமைக்கப்பட வேண்டும் யாழ். பல்கலைக் கழகத்திற் பேராற்றல் உள்ள பேரறிஞர்கள் பேராசிரியர்களாக விளங்குகின்றனர். இவர்கள் எல்லோரும் கூடி இந்தத் தமிழ்த் தொண்டினை ஆற்ற

(வளர்ச்சி 4 ஆம் பக்கம்)

முன்னைப் பல பிறப்புக்களிலே மன்னிய புண்ணியம் அன்றோ.

இன்னன் புகழும் பெருமையும் மன்னிய மொழி வளம் உள்ளது அன்னை தமிழ் என்று நாம் சிந்தியாமல் இருப்பதற்கு ஞாயம் உண்டு என்னை,

மாய வலைப்பட்டு வேறு தேய மொழியிலே நேயங்கொண்டு விட்டோம்.

மாயமிதை விடுத்த ஒரு உபாயம் தான்.

தமிழ்மொழிக்குத் தனி நாள் ஆண்டுக்காண்டு தக செய்து உள் ஒளி காணும் முயற்சி.

காண்போம் அந்தத் தூய ஒளியை பிரேமையில் யாவும் மறந்தோமோ! அப்படியா அல்லது சிந்திக்கும் தகைமையை இழந்து விட்டோமா

திருமுறை ஓதும் போது ஓதக் கேட்கும் போதும் இந்த அன்னை மொழியின் இன்பத்தைப் பற்றி நாம் எண்ணி ஆநந் மடையச் சிந்தனை செய்கின்றோமில்லையே.

தேவார பாராயணம் ஒரு நியமம்; என்ற அந்த அளவிலே அதற்கு இடங் கொடுக்கின்றோமேயன்றி அத்திரு மொழிகளின் அரிய பொருளையோ தமிழின் அருமையையோ நாம் சற்று நின்று உற்று எண்ணுவதில்லை.

எனவேதான் தமிழ்மொழி நன் என்று ஒரு நாளை அமைத்து அன்று வது அன்னையை எண்ணி ஆனந்தம் அடையலாம் என்பதுதான் இப்பொழுது நாம் அமைக்கும் சிந்தனை வழி.

X:X

## நந்தமிழே முழங்குவது மேன்மையன்றோ?

**"சொக்கன்"**

தமிழ் மொழியை அமிழ்தென்றும் கன்னி யென்றும்
தாயினிலும் பெரிதென்றும் தருக்குகின்றோம்
இமயத்திற் புலிமீன்வில் பொறித்த மேன்மை
எம்முன்னை மன்னர்களுக் குரித்தென் கின்றோம்
எமதுமொழி வள்ளுவனைக் கம்பன் தன்னை
இவ்வுலகிற் களித்ததென இறுமாக் கின்றோம்
தமக்கிணையில் சமயகுர வர்களோடு
தலைமைபெறும் மொழியெனவே போற்று கின்றோம்.

ஆனலெம் வாழ்வினிலே தமிழி னுக்கே
அளித்துள்ள இடம்பற்றிச் சிந்தித் தோமா?
ஏனோதா னோவென்றே அலட்சி யங்கொண்(டு)
எமதுகை யெழுத்தெல்லாம் ஆங்கி லத்தில்!
போனமொழி சுதந்திரத்தோ டதுவா னாலும்
புகலுரையா டலினிடையில் பலவாம் சொற்கள்
தேனமுதத் தமிழோடு கலக்கா விட்டால்
செந்தமிழர் பொச்சங்கள் தீர்வ தில்லை! (2)

ஆங்கிலத்தைப் படிப்பதிலே குற்றம் இல்லை.
அதுஉலக மொழியெனலுக் கட்டி இல்லை.
தீங்கில்லை ஆனாலும் கையெழுத்தைச்
செந்தமிழில் இடுவதற்கு வெட்கம் ஏனோ?
நாங்கூடி உரையாடு கின்ற போதில்
நல்லதமிழ் ஒலிசெய்யத் தயக்கம் ஏனோ?
ஆங்கிலத்தில் வங்கியது கணக்கு வைத்தால்
அதிலென்ன பெருமைஇதைச் சிந்தித் தீரா? (3)

உலகத்தில் மொழிக்குவிழா எடுக்கும் சாதி
உயர்தமிழச் சாதியொன்றே ஆனல் அஃது
நலந்திகழும் தன்வாழ்வில் வேண்டாப் போதும்
நயந்துபிற மொழியினைக்கை யாளல் நன்றோ?
சிலைஒவை பாரதிக்கே எடுத்தும் என்ன?
சிந்தையிலே தமிழ்குடிகொள் ளாத போதில்
நலம்வேண்டில் தமிழரது வாழ்வில் என்றும்
நந்தமிழே முழங்குவது மேன்மை யன்றோ? (4)

## நூற்றாண்டினுள் ஓர் நூற்றாண்டு

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

ORIENTAL BALM ) யின் விளம்பரத்தைப் பெற்றுக் கொடுத்துப் பத்திரிகைக்கு வருவாயைப் பெருக்கிய பெருந்தன்மையினர்.

"விளம்பர யுக்தி வியாபார விருத்தி" என்ற சிறந்த உரை நடை நூலை ஆக்கிப் பிரசித்தி பெற்ற சிவசம்பு அவர்கள் ஆங்கில இந்துசாதனத்தின் வளர்ச்சியிற் கண்ணும் கரிசனையும் ஆக விருந்து விளம்பரங்கள் சேகரித்துதவி வந்தனர்.

இந்துசாதன விழா மலருக்கு ஸ்ரீநடராசத் திருவுருவம் அமைத்து முகப்பினை மிக்கவர்ச்சியாக்கும் உபயஞ் செய்தனர் -- அம்மலரில் இவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையும் கவிதையும் வெளி வந்தன.

**சபையின் அபிமானி**

சைவபரிபாலன சபை வளர்ச்சிக்கு இந்துசாதனம் எழுச்சியாக இருக்க வேண்டுமென்று சிவசம்பு அவர்களின் சேவையைச் சபையாக (1948) விரும்பிய பொழுது, அந்நாள் செயலாளராகவிருந்த திரு மு. மயில்வாகனம் அவர்களுக்கு இவர்ஒரு யுக்திமதிகூறி இந்து பத்திரிகையின் ஆசிரியராக நாற்பதாண்டுகளுக்கு மேலாகத் தொண்டாற்றிவரும் தமது சகோதரன் நம. சிவப்பிரகாசம் அவர்களின் சேவையைப் பெற வழிவகுத்தனர்.

1948 ம் ஆண்டு சிவசம்பு அவர்கள் தமது கனிட்ட புத்திரிக்குத் திருமணம் நிகழ்த்த வண்ணை ஐயனார் கோயிலடியில் வதியும் பொழுது தமது கனிட்ட புத்திரன் சண்முகத்தை யாழ் இந்துக்கல்லூரியில் மாணாக்கனாகச் சேர்ப்பித்துச் சபையில் வைத்த அபிமானத்தை மேலும் விரியச் செய்தனர் சிறுவன் சண்முகம் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முது கலைமாணிப்பட்டம் பெற்றமை குறிப்பிடத்தக்கது அக்காலத்திலே நாவலர் பற்றிக் கட்டுரைப் பரிசு கொழும்பு மநகரிற் பெற்றனர். அக் கட்டுரை இந்து சாதனத்தில் வெளி வந்தது.

திரு சிவசம்பு அவர்கள் அரிய ஆராய்ச்சியாளர். சென்னைத் தொல் பொருள் பேணும் நிலையத்திற் பெரிது முயன்று ஈழத்துத் தலை சிறந்த கலைஞர்கள் கரல்டு விசுவநாதபிள்ளை (சுதுமலை) கெல்லொக்கு விசுவநாதபிள்ளை (மல்லாகம்) சி. வை. தாமோதரம்பிள்ளை பொன் இராமநாதன், வி. கனகசபைப்பிள்ளை முதலிய பலரின் கல்வி விருத்தி விபரங்களைக் குறித்து அவற்றை நூலாக்கும்வண்

(வளர்ச்சி 3 ஆம் பக்கம்)

# செஞ்சடையார்சீர்தொடுக்கும்கானம்

இராகத்துக்கு இன்னொரு பெயர் கானம். எனவே இனிமைக்கும் இது பொருளாகின்றது'

செந்தமிழ் இலக்கியச் சிறப்பு வாய்ந்த சேக்கிழார் சுவாமிகளின் திருத்தொண்டர் மாக்கதையிலே, கானமே உருவான பொற்றுளப் போதகர் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணத்தில் உள்ள தீஞ்சுவைச் செய்யுட்களிலே கனிரசம் போன்ற தொன்றை ஈண்டுக் குறிப்பிடுகின்றோம்.

சைவ நீதி மாமறைச் சிறுவராம்குரவர் சம்பந்தமூர்த்திகள் செஞ்சடையார் சீர் தொடுக்கும் கானத்தின் எழுபிறப் பென்று விளங்க வைக்கின்றார் புராணம்பாடிய புலவர் அடியார்.

இத்தகைய தெய்வீகத்தன்மையுடையது கானம். எனவே இராகம் அவையும் உணர்ச்சி ஊற்று போற்றுதற்குரிய கானம் ஆக இலக்கியத்தில் இடம் பெறுகின்றது.

இராகத்தை இயற்கை மனிதன் குரலாக அறிவதுடன் மரக்கருவி தோற்கருவி மூலமும் அநுபவிக்கின்றோம்.

குரல் என்பது இசைக்கு சத்தத்துக்கும் சாரீரத்துக்கும் பொருந்தும்.

சுரம் என்பது இசையை, மற்றும் இராகத்தகுதியையும் குறிக்கும்.

வேய்ங்குழல், புள்ளாங்குழல் போன்றுள்ள கருவியொன்றுக்கு நதசுரம் நாகசின்னம், நாயினம் என்று பலவாருகப் புனை பெயர் உண்டு. இவற்றின் பொருத்தத்தையோ கருத்தினையோ விருத்தியையுரைப் பதற்கு இச்சிறிய உரையில் இடம் பெறுதல் அரிது. தனித்து ஆராயப்பட வேண்டியது.

தமிழகத்திலும் சார்ந்த தலங்களிலும் அமுதம்போன்ற கானம் பொழியும் கருவி நாதசுரம், இக்கருவியில் மிகக் கலைஞ ஞமுள்ளவர்களை நாதசுர வித்துவான்கள் என்று அழைப்பது வழக்கம்.

இந்நாட்டிலே தொன்று தொட்டு முன்னணியில் நிற்கும் நாதசுர வித்வப்பரம்பரையுண்டு. தண்ணூர் அங்குறுச்சாமி அவர்கள் தொடக்கமாக அநேகர் மறவாப் புகழ் வாய்ந்தவர்கள்.


அந்த அடியில் இப்பொழுது உள்ளவர்களிற் பட்டதாரியாக விளங்குபவர் வித்துவான் நா க. பத்மநாதன் அவர்கள் அன்னுநடன் கர்ணாமிர்தம் பொழியும் கான விற்பன்னர்கள் அநேகர் இளைஞர்கள் இருக்கின்றனர்

அவர்கள் யார் யார் என்றுரைக்கின் விரியும். இப்பொழுதுள்ள நிகழ்ச்சிக்கு உரியவர்கள் இசை இரட்டையர்கள் கான மூர்த்தி சகோதரர்கள்.

## வெள்ளிவிழாக் காணும் வித்துவான்கள்.

சோழவள நாட்டிலே ஆலந்துறையில் உடன் பிறந்தவர் இருவர். ஒருவர் குருடர் மற்றையவர் முடவர் இயற்கைக் கவிஞர்கள் கலம்பகத்திற்கு இரட்டையர்கள் என்பர் முன்னைப்புலவோர் ஓர்பாலே ஓர்பாதி ஒருவரும் ஏனையது மற்றையவரும் மாக உடன் அமைக்கும் கலைஞர் சோடியாக விளங்கினர்.

அவ்வாறு இந்நாட்டில் நாதசுர இசையில் உடன் பிறந்தார் இருவர் உளர் ஆனால் அவர்கள் இருவரும் மாசற்ற சரீரமும் சாரீரமும் உடையவர்கள்.



இசை அரங்கு என்றால் எழில் விளங்குவதியல்பேமேம்பாடான மேடையில் கானச்சோடி இருவரும் ஒதுங்கமைந் திருக்கும் பொழுது சிங்காரத்தின் அலங்காரம் என்றே சொல்ல வேண்டும்.

இளமை தழுவிய தோற்றம், உயரத்தில் ஏற்றமின்மை, நயனமும் வதனமும் தோளும் கரங்களும் யாவும் அமைவிற்றமே

குழல்கள் இரட்டையர்கள் கைகளில் விளங்கும் பொழுது ஒரு எழில் எழும். அழகு தவழும்

குழல் என்றால் ஊதிடு குழல் குழலன் கோட்டன் குறும்பல்லியத்தன் என்று திருமுருகாற்றுப்படையிலும் குழலினிது யாழினிது என்று திருக்குறளிலும் வரும் அருமை கண்டின்புறுகின்றோமல்லவா.

கானமூர்த்தி இசை ஞானமூர்த்தி தேனினுமினிய கானம் பொழியும் இரட்டையர்கள் இவர்களுக்குக் கீர்த்தி வளர்த்த வண்ணம் இருக்கின்றது இந்நாட்டிலே நாதசுர கீத வித்துவக்கலைஞர் இன்றும் பலர் உண்டு அவர்கள் வெள்ளிவிழாக் காணும் வேளைகளில் அன்னாரின் பொன்னுமம் போற்றப்படும்

கானமூர்த்தி சகோதரர்களுக்கு இசை கேட்டின்புறும் செவிஞானம் உள்ளவர்கள் ஆன்மட்டும் ஆசி கூறுவர்கள், கூற ஆசைப்படுவார்கள் வாழ்க கானம் வாழ்க கானத்துணைவர். வாழ்க கலை.

○★○

ஆனைக்கோட்டை - வடமேற்கு

## ஞானவைரவர் ஆலயம் மகாகும்பாபிஷேகம்

விபவ பங்குனி 9 ம் நாள் உத்தர நட்சத்திரத்தில் ஞானவைரவர் பெருமானுக்கு புநராவர்த்தன மகா கும்பாபிஷேகம் பிரதிஷ்டா சிரோமணி சிவஸ்ரீ க. கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நிகழவிருக்கின்றது.

சிவஸ்ரீ கை. சோமசுந்தரக் குருக்கள், சிவஸ்ரீ கா. சிவ-கடாட்சக் குருக்கள் சிவஸ்ரீ பொன். சோமசுந்தரக் குருக்கள் சர்வசாதகர் வேத சிவாகம வித்துவான் சிவஸ்ரீ நா. மகாதேவாக்குருக்கள் சர்வ சாதகர் பிரம்ம ஸ்ரீ க. கிருஷ்ணேஸ்வர சர்மா பூசகர் பிரம்ம ஸ்ரீ இ. அரவிந்தசர்ம ஆகியோர் கும்பாபிஷேகத் திருத்தொண்டாற்றுவார்கள்.

கலாநிதி சிவஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அருள் ஆசியுரை வழங்குவர்.

ஆலய தர்மகர்த்தாவும் அவர்களுக்குத் துணை புரியும் தொண்டர்களும் அரிதில் முயன்று இப்பெரு வைபவத்தைச் சிறப்புற நிகழ எல்லா ஒழுங்குகளும் செய்திருக்கின்றமை பாராட்டுக்குரியது.

## பசு இனம் பாதுகாத்த பரமஞானி

### பரமனடி பணிந்த பங்குனிப் பூசம்.

தமிழ் அகத்திலே பாரத நாட்டிலே ஒரு திருநெல்வேலியாம் அகத்திலும் ஓர் திருநெல்வேலி. இந்தத் திரு அடைமொழி சிறக்கும் ஊர் அந்தப் பெருந்தகைமையைப் பேணும் பெரியார்களின் பிறப்பிடமாகவும் வதியும் இடமாகவும் கொண்டு வந்திருப்பது பொருத்தமே.

பழங்காலத்திலே இத்திருநெல்வேலியில் நன்மரபென்று பல்வகையிலும் மேல் நின்று விளங்கியது. ஆறுமுகநாவலர் அப்பெருமரபில் உதித்த பெருமைக்கு உரிமையாகத் தோன்றியவர் பூர்வ புண்ணியப் பொருத்தமுடைய ஞானப் பிரகாசர். ॐ

## ஸ்ரீ இராமகிருஷ்ண ஜயந்தி,

ஸ்ரீ ராம கிருஷ்ண ஜயந்தி (1:4 ம் திதி பூசை) கொழும்பு மாநகரில் இராம கிருஷ்ண மண்டபத்தில் 9. 3. 89 அன்று பஜனை, திருமுறைப் பாராயணம் சொற்பெருக்கு முதலியன சிறப்பாக நிகழ்ந்தன.

சுவாமி சம்பிரஜானந்த அவர்கள் தலைமையிலே. திருமதி இரத்தினம்மா நவரத்தினம் அவர்களும் திரு. . சிவராசசிங்கம் அவர்களும் சொற்பெருக்காற்றினர்.

வழமை போல சிவராத்திரி விழா விசேட பூசை பஜனை இரவு முழுவதும 6 - 3 - 1989 அன்று நிகழ்ந்தன,

2 ஆம் பக்கத்து வளர்ச்சி நூற்றாண்டினுள் .....

ணம் தமது கடைசிக் காலத்தில் (1974) தம்பியார் நம. சிவப்பிரகாசம் அவர்களிடம் ஒப்புவிக்கும் வண்ணம் பணித்திருந்தனர். ஆனால் அந்த வேண்டு கோளை நிறைவேற்ற வேண்டியவர்கள் அவ்வாறு ஒப்படைக்கக் காலதாமதஞ் செய்து விட்டனர். எனினும் சிவசம்பு நூற்றாண்டு வெளியீடாக இவ்விபரங்கள் வெளிவர நம. சிவபிரகாசம் அவர்கள் முயன்று வருகின்றனர்.

சிவசம்பு அவர்களின் வாழ்க்கைத்துணை தாய்மாமனு கலைமாணி அமிர்தலிங்கம் பிள்ளையின் ஏகபுத்திரி, மங்களேஸ்வரி. சென்னை அஞ்சல் திணைக்களத்தில் அதி விசேட பதவி வகித்த அமிர்தலிங்கம் பிள்ளை மேற் குறிப்பிட்ட கனகசபைப்பிள்ளையின் புத்திரி சுந்தரம்பாளைத் திருமணஞ் செய்து குடும்பக்கொலுவுக்கு பெருகூட்டினர்;

அறுபத்திரண்டு ஆண்டுகள் அரிய இல்லறம் நடத்திய சிவசம்பு மங்களேஸ்வரி மணமாட்சியின் மகத்தான பேறுக, கணேசன், சண்முகம் (முதுகலைமாணி) சென்னை பல்கலைக்கழக விரிவுரையாளர், மல்லிகேஸ்வரி, கற்பகவல்லி என நால்வர்.

மாதரசி மல்லிகேஸ்வரி சட்டத்தரணி வ. கனகரத்தினம் அவர்களைத் திருமணஞ் செய்து உருத்திரா என்ற ஏகபுத்திர பாக்கியம் பெற்றனர். உருத்திரா அவர்கள் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டதாரி, பட்டயக்கணக்காளர். தாய்மாமன் கணேசனின் சிரேஷ்ட புத்திரி சுமதியைத் திருமணஞ் செய்து மக்கட்பேறுடன் உத்தியோகம் புகழ் இலட்சணமாகக் கொழும்பு மா நகரில் விளங்குகின்றார்;

கனிஷ்ட புத்திரி கற்பகவல்லி கலைமுதுமாணி திருவாரூர் உயர்நிலைப்பள்ளித் தலைமை அதிபராகி ஒய்வு பெற்று கல்வித்திணைக்கள விருது பெற்றுள்ளார். ஏகபுத்திரனு ஜயேந்திரன் கலைமாணி சென்னைப் பல்கலைக்கழக விரிவுரையாளராக விளங்குகின்றனர்.

சிரேஷ்ட புத்திரன் கணேசன் சிதம்பரத்தம்பி ஐயா புத்திரி மாணிக்கவல்லியைத் திருமணம் செய்து புத்திர பாக்கியத்துடன் இல்லறம் கொழும்புமாநகரில் நடத்துகின்றனர். கணேசன் அவர்களும் தந்தையாரின் விளம்பரவித்தைபயின்று பெரிய வர்த்தக நிலையங்களிற் கடமையாற்றிப் புகழ்படைத்தனர்.

இந்துசாதனத்துக்கும் இந்த எழிலுடைய பத்திரிகை விற்பன்னர் சிவசம்பு அவர்களுக்கும் உள்ள நுண்ணியமான கண்ணியமான தொடர்பினால் இந்த நூற்றாண்டு எழிலுக்கு எழில் ஊட்டியவகையில் எழுகின்றது.

எனவே இந்த நினைவுஉரை சிறந்த அம்சமாக உள்ளவர்கள். தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்பாளர் பாடபுத்தக ஆசிரியர் தமிழ்ஆங்கில அகராதி தொகுப்பாளர் வீ. விசுவநாதபிள்ளை.

தமிழர் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் என்ற அரிய ஆராய்ச்சி நூலாசிரியர் சட்டத்தரணி கலைமாணி வி. கனகசபைப்பிள்ளை.

சென்னை அஞ்சற்றிணைக்கள அதிஉயர் அதிகாரி கலைமாணி க. அமிர்தலிங்கம்பிள்ளை.

ஊர்ப்பெயர் உட்பெயர் விளக்க நூலாசிரியர் மல்லைப் புலவர் இ. நமசிவாயம்பிள்ளை.

என்ற வித்துவமுன்னோர்களின் பின்னோன் திரு. நம. சிவசம்பு அவர்கள் என்பது இவர்களின் வாழ்க்கை வித்தியா விருத்தியை விளக்குகின்றது எல்லாவற்றிலும் மேலாக,

ஆங்கில இந்துசாதன ஆண்டு பலவான அரிய கட்டுரை அபிமானியாவர் நம. சிவசம்பு அவர்கள்.

சிவசம்பு அவர்களின் வித்தியா விருத்திக்குரிய விபரங்களையும் இங்கே சாற்றுதல் வேண்டும்.

இவர்களின் தாயார் அன்னம்மா அவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட வீ. விசுவநாதபிள்ளை (தமிழ் - ஆங்கில அகராதித் தொகுப்பாளர் சென்னை, அவர்களின் புத்திரி தங்கம்மாவின் புத்திரியாவர். தாய் மாமனாகத் தமிழர் ஆயிரத்தெண்ணூறாண்டுகளுக்கு முன் என்ற ஆராய்ச்சி ஆங்கில நூலாசிரியர் வி. கனகசபைப்பிள்ளை (கலைமாணி சட்டத்தரணி) அவர்களை அன்னம்மா பெருமையுடன் பாராட்டி வந்தனர்.

ஈழநாட்டு நல்லறிஞர்களிலே ஆராய்ச்சி வல்லுநராகவுள்ளவர்களிலே முன்வரிசையிலிருந்தவர். கலாநிதி யேம் சு. தி. இரத்தினம் அவர்கள்.

இரத்தினம் அவர்களின் ஆராய்ச்சி வெளியீடுகளைக் கணித்துப் பல்கலைக்கழகம் அவருக்குக் கலாநிதிப்பட்டம் வழங்கியது;

ஆங்கிலத்தில் வெளி வந்த ரிறிபியூன் (TRI BUNE) என்ற சிறந்த ஆராய்ச்சித் திங்கள் வெளியீட்டில் இந்த இருவரும் கட்டுரை எழுதும் வழக்கமுடையவர்களாய் இருந்தனர். அந்த வெளியீட்டிலே தமிழர் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன் என்ற அரிய நூல் எழுதிய வி. கனகசபைபபிள்ளை அவரது தந்தை விசுவநாதபிள்ளை பற்றிய கட்டுரைகள் வெளி வந்தன.

கலாநிதி இரத்தினம் அவர்கள் பல முறை மல்லாகத்தில் எமதில்லத்தில் எம்மைக் கண்டு தமது நண்பன் சிவசம்புவின் சுகநயம் பற்றி அறிவதுடன் அவரின் ஆராய்ச்சித் திறமை பற்றியும் குறிப்பிட்டு மகிழ்வித்தனர்

"இறை-ஒளி"

## ''செந்தமிழ் செந்தமிழ்' என்போம்

ஆனந்தக் களிப்பு (முன்வளர்ச்சி 8)

— "இறை - ஒளி" —

'செந்தமிழ் செந்தமிழ்' என்போம்
தெய்வச் செந்தமிழ் செந்தமிழ்
செந்தமிழ் என்போம், (செந்)

சித்தம் தெளிந்த அறிஞர் — ஒன்று
சேர்ந்து செயற்படின் சித்திகை கூடும்
புத்தி பொலிந்த புலவீர் — இன்று
போற்றும் தமிழ்வழி புத்தகம் ஏடும். (செ)

மூற்றும் கொணர்ந்திந் நிலையம் — கல்வி
மூச்சுச் செறிந்திட முன்னனி நாடி
இற்றை உணர்ச்சி இதயம் — மல்க
ஏற்றம் அளித்திட நற்பணி யாற்றீர். (செ)

Hindu Organ

MARCH (20. 03. 1989)

# Calling attention! of all concerned

Special circumstances need particular attention; extraneous happenings require immediate consideration. Extricating a community in its entirety from its confinement in utter chaos cannot be an easy exercise. It is an uphill task that demands the uudivided attention of all concerned Alleviatory measures alone cannot afford relief, neither mitigation. can be expected

Here is a situation that is most puzzling. The routine of normal life cannot be restored until and unless security of person and property is assured.

More important is the mental disposition of the aggrieved persons in the context of revival. Sober thinking, sincere feeling and solemn behaviour must characterize the effort of resuscitation.

AID: that is the source of material help that is normally needed by a whole mass of people living as refugees. It flows from those who are endowed with the quality of mercy: The compassion that is shown by one person to another is in itself a sterling quality of magnanimity; it is twice blest as poet Shakespeare defined it. Blessing both the giver and the given, this benificence brightens the scope of rehabilitation, Such a noble tendency must not become tarnished by selfish considerations of those who arrange to distribute in-coming aid; the receiver of such benefits also must be truthful in making use of gifts.

This is trost; a responsibility, a duty in which all who are involved must act. conscientiously. Misuse of trusts means criminality.

That is why attention is being called! In this hour of rehabilitation, It would be funny if solemnity is diluted by adding festivity. Even religious ceremonies should be restricted to rituals; all items of entertainment shoulp be avoided.

Austerity, becomes a matter of absolute necessity. It is a moral obligation, a religious duty in other words, simple living should be the ideal; high thinking will make simplicity of life a real boon to all who are to be rehabilitated.

# Churchill Presents The Bill

(BY YALPADI)

When the bleeding British nation,
pressed by peoples for debt payment,
Sat seeking means in contemplation,
Pleading patience and delayment.

Sage, behind the stately cheroot,
spake the hoary war-chief Churchill.
" Sterling debts, they prattle, my foot! "
Rise, brethren, draw up the bill. "

Hero of a hundred phrases,
Fiery, firm and tongue in cheek,
"I know the Oriental Races, "
The war lord thundered in his pique.

" They shall pay for coming ages
In blood and sweat and toil and tears
For Anglo-Saxon fighters' wages,
That extended four long years ",

"We fought in beach and bay and fords,
On hill and mount and dale and towns,
And saved them from the Nazi hordes
And traitor Nippon's cruel clowns".

What recompense to valiant fighters
That beat the enemy by our might,
And saved ungrateful Eastern blighters?
Come, lug the bill and screw it tight. "

(In memory of the composer - R. N. Sivasambu)
(IN HINDU ORGAN DIAMOND JUBILEE NUMBER)

# சதாவதானி ..........

1 ஆம் பக்க வளர்ச்சி

ஒருவராவர். தன்னுடைய மனவளர்ச்சிக்குக் கதிரவேற்பிள்ளை எவ்வாறு காரணராயிருந்தாரென்பதைத் திரு. வி. க. வின் பின் வரும் கூற்றுக்கள் தெளிவாக்குகின்றன.

"ஆங்கில நாவன்மையால் உலகையே கவரச்செய்தல்வேண்டுமென்ற பேராசைப் பேய் என்னைப் பிடித்து அலைத்தது. அப்பேய் என்னைத் தனக்கு இரையாக்கவில்லை கதிரவேற் பிள்ளையின் கூட்டுறவு அப்பேயை ஓட்டிற்று"

"முதலில் பெற்றோர் கடைப்பிடித்த சைவத்தில் நின்றேன் அஃது என்னுள் கதிரவேற்பிள்ளையின் கூட்டுறவால் சிறிது விளக்கம் பெற்றது:

இவ்வாறு தமிழுலகுக்கு ஒரு பெரும் அறிஞரை உருவாக்கித் தந்து தமிழர் சமுதாயத்துக்குக் கதிரவேற்பிள்ளை பெருந் தொண்டாற்றியுள்ளார்;

(2) பழம்பெரு இலக்கியங்களுக்கு விரிவுரைகள் எழுதி அவற்றை இலகு வாக்கும் முயற்சியிலே கதிரவேற்பிள்ளை ஈடுபட்டார். அவ்வாறு எழுதப்பட்ட நூல்கள்:

"கூர்மபுராண விரிவுரை பழனித்தல் விரிவுரை" ஆகியனவாகும்.

(3) சைவ சமயக் கிரியைகள் சைவ சித்தாந்தம் ஆகியவற்றை விளக்கித் தமிழுலகுக்குப் பல நூல்கள் எழுதித் தொண்டாற்றியுள்ளார்: அவர் அவ்வாறு எழுதிய நூல்கள் சைவசந்திரிகை, சுப்பிரமணிய பராக்கிரமம், கருவூர் மான்மியம், சிவாலய மகோற்ஸவ விளக்கம், சைவசித்தாந்தச் சுருக்கம் என்பனவாகும்.

(4) தம்முடைய மதத்தினை நிறுவுவதற்காகப் பிறர்மதங் கண்டிக்கும் போக்குத் தொன்று தொட்டு இன்று வரை நிலவுகின்றது. கதிரவேற்பிள்ளை சைவமதத்தை நிறுவுவதிலே தீவிரமுள்ளவர். தமிழர் வரலாற்றிலே கண்டனகாரர் பலர் தோன்றியுள்ளனர். ) அவர்கள் வரிசையிலே கதிரவேற்பிள்ளைக்குச் சிறப்பிடம் உண்டு அவர் இயற்றிய புத்தமத கண்டனம், மாட்பா மறுப்பு எனும் நூல்கள் அவருடைய கண்டனப் போக்கினைக் காட்டுவன;

(5) தமிழ் ஆராய்ச்சிக்கு உதவும் கருவி நூல்களுள் தமிழ் அகராதிகளும் முக்கியத்துவம் பெறுகின்றன கதிரவேற்பிள்ளை தொகுத்தளித்த தமிழ்ப் பேரகராதி தமிழ் வரலாற்றிலே ஒப்பற்ற இடத்தைப் பெற்றுள்ளது. அதனுடைய புதிய பதிப்பு ஒன்று 1981 ல் மதுரையிலே நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு அவையிலே வெளியிடப்பட்டது. யாழ்ப்பாணத்திலே வழங்கும் பல அரிய சொற்களை அவர் இவ்வகராதி மூலம் அறிமுகப் படுத்தி வைத்தார்.

தமிழுக்குத் தொண்டு செய்பவர் பெயர் அழிவதில்லை. கதிரவேற்பிள்ளையோ தமிழுக்கும் சைவத்துக்குந் தொண்டாற்றிய அழியாப் புகழ் பெற்றுள்ளார். இன்றைய காலகட்டத்திலே இத்தகைய அறிஞர்களை நினைவு கூருதல் பொருத்தமானதேயாகும்.

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைவீதி, 450ஆம் இலக்கத்திலுள்ள சபையாரது சைவப்பிரகாச அச்சகத்தில் 1989ஆம் ஆண்டு பங்குனி ( 20 - 03 - 89 ) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர் ; நம, சிவப்பிரகாசம்;

# தமிழ் மொழி நாள்

1 ஆம் பக்கத்து வளர்ச்சி

பெரும் தமிழ்க் குரவரின் நாளை எடுத்து நினைவு கூர்ந்து எங்கள் இதய தாமரையில் மேலும் இன்பம் நெகிழ வைப்போம்.

புலமை பொலியும் புலோலிப் புகழூர்
தலமாய்நா கப்பிள்ளை தந்தை — குலமாண்
முன்னோர் குரோதி முதுதமிழ் ஞாலமெலாம்
முன்னேங்க வந்தார் முகிழ்ந்து.

வேளாண்மன் செய்கதிரை வேற்பிள்ளை நன்னாமம்
நீளாண்டு பாரில் நிலவிஎழக் — கோளாண்டு
வாய்ந்திடப் பாரதத்தில் மாகலைஞர் நூலெலாம்
ஆய்ந்துரை கண்டார் அறிந்து:

ஐம்புலனும் ஓர்நெறியாய் ஆன்மமெய்ப் பேரொளியாய்ச்
சம்புசிவ சத்திமயம் சால்பாக — அம்புவியில்
அட்டாவ தானச்சீர் ஆண்டனர் இவ்வழியில்
எட்டாத தில்லை இவர்க்கு.

சொல்லகராதி துலங்குதமிழ் நூலொன்று
வல்லகலை நுண்மை வகுத்துரைத்து — தொல்லறிஞர்
கூற்றமைய யாழ்நாட்டின கொள்கை வெளியிட்டார்
போற்றரிய இந்தப் புகழ்.

# தமிழில் முடியும்

( 2 ஆம் பக்கத்து வளர்ச்சி )

வேண்டும். இன்றே செய்ய வேண்டும். இன்னே தொடங்க வேண்டும்.

மேன்மைக் கலைகள் தமிழினில் வேண்டியளவு உண்டு என்று, பாரதியார் எங்கிருந்தாலும், ஞான திருஷ்டியினால் அறியக்கூடியதாகச் செயற்படுவோமாக.

ஒரு மொழி பெருமொழி என்ற பெருமைக் குரியதாதற் கலைகள் யாவும் அம் மொழியில் அமைந்தே யிருக்க வேண்டும்.

தமிழ்மொழி விசேட நாள் ஒன்று என்று வேண்டாமல் ஒவ்வொரு நாளும் செந்தமிழ் நாளாக ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து இயங்குதல் வேண்டும்.

"பிறநாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியிற் இயற்றல்
வேண்டும்"

என்று அந்த பாரதிப் பேரபிமானி கோரியதுபோல ஆக்கப் பணியில் எங்கள் பல்கலைக் கழகம் இயங்குதல் வேண்டும்.

## தமிழர் தாய்க் கழகம்!

அறிவுச் சுடராக விளங்கிய வள்ளல் பொன். இராமநாதன் அமைத்த பரமேசுவரா கலா வித்தியாலயம் கலைப் பொன் விளையும் களம். அவ்வித செழிப்பன பூமியிலே அமைந்த பல்கலைக் கழகம் பல நலப் பணிகளில் ஈடுபட வேண்டிய கடமை பூண்டிருக்கின்றது. அங்குள்ள பேரறிஞர்கள் ஆற்றும் நற் பணியை இன்னும் விரிவாக்கி தமிழுக்குத் தாய்க் கழகமாக விளங்க வைப்பார்களாக. நிறுவியோரின் நீண்ட நினைவுகளை நாம் நினைவுகூருதல் பொருத்தமன்றோ ............ ?

★ தொல்காப்பியம் தெய்வத் தமிழ் மெய் வாக்கியம் ★